# சிவஞான முனிவர் வாழ்வும் நூல்களும்
## [டாக்டர் இரா. தண்டாயுதம்]

தமிழிலக்கிய வரலாற்றில் பதினெட்டாம் நூற்ருண்டு ஒரு குறிப்பிடத்தக்க நூற்ருண்டாகும். இலக்கியம் என்ருல் அது செய்யுள் இலக்கியம் மட்டுமே என்று கருதிய காலகட்டம் மெல்ல மறையத் தொடங்கி, உரைநடையிலும் இலக்கியம் மலர முடியும் என்ற நம்பிக்கை அரும்பு விட்டது இக்காலப் பகுதியேயாகும். இவ்வகையில் உரைநடை இலக்கியத்தின் விடிவெள்ளிக் காலம் என இதனைக் குறிப்பிடலாம். மற்ருெரு வகையில், செய்யுள் இலக்கியமே இலக்கியம் எனக் கருதப்பட்ட ஒரு நீண்ட காலகட்டத்திற்கும் உரைநடை இலக்கியம் மேலோங்கி நிற்கின்ற இக்காலத்திற்கும் இடையில் ஒரு பாலமாக இந்நூற்ருண்டு அமைகின்றதெனலாம். சமயத் துறையிலும், அதுவரை இருந்த நிலைமாறி, கிருத்துவம் இந்நூற்ருண்டிலேயே மிக வேகமாகப் பரவத் தொடங்கியது. சமயம் பரப்ப மேலை நாடுகளிலிருந்து வந்த கிருத்துவப் பாதிரிமார்கள் சமயம் பரப்பியதுடன் தமிழ் உரைநடை மாற்றத்திற்கும் பெருங் காரணமாகத் திகழ்ந்தார்கள். பத்தொன்பது, இருபதாம் நூற்ருண்டுகளில் மலர்ந்த இலக்கிய வகைகளுக்கு இம் மாற்றமே அடித்தளம் அமைத்துத் தந்தது.

இலக்கியம், சமயம் என்ற இரு துறைகளிலும் இவ்வாறு பெரும் மாற்றங்களுக்குக் காரணமாகத் திகழ்ந்த இந்நூற்ருண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களில் தலைமையானவர் மாதவச் சிவஞான யோகிகள். சிவஞான முனிவர், சிவஞான யோகிகள், சிவஞான சுவாமிகள், சித்தாந்தப் பேரிகை, மாபாடியகாரர், திராவிட மாபாடிய கர்த்தர் பாடிய முதல்வர், திருவாவடுதுறை ஆதீனக் குலதெய்வம் எனப் பலவாறு தமிழிலக்கிய, இலக்கண, சமய வரலாறுகளில் அவர் சிறப்பிக்கப் படுகின்ருர். மெய்கண்ட சாத்திரங்களுக்கும் தாயுமானவ சுவாமிகளுக்கும் பின்னர் தோன்றிய மிகப்பெரும் சித்தாந்த ஞானியாக முனிவரைச் சைவ உலகம் கொண்டாடுகிறது. மிகச் சிறந்த இலக்கிய ஆசிரியராகவும், இலக்கண ஆசிரியராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், மொழி பெயர்ப்பாசிரியராகவும், கண்டன நூலாசிரியராகவும் விளங்கிய இவ்வறிஞர் மறைந்து இரு நூற்ருண்டுகள் ஆகின்றன. அவர் முத்திப்பேறு அடைந்த இரண்டாம் நூற்ருண்டு விழாவான இவ்வாண்டில் அவரது வாழ்வையும் நூல்களையும் நினைவு கூர்ந்து, தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கணத்திற்கும் சமயத்திற்கும் அவர் ஆற்றிய தொண்டுகளைப் போற்றுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

### வாழ்வும் காலமும்

தமிழ்ப் புலவர்களும் கலைஞர்களும் அறிஞர்களும் தங்கள் படைப்புக்களை முன் வைப்பதில் செலுத்தும் கவனத்தைத் தங்கள் வாழ்வை வெளிப்படுத்துவதில் செலுத்துவதில்லை எனப் பொதுவாகக் கூறப்படுவதுண்டு. மாதவச் சிவஞான சுவாமிகளும் இதற்கு விதிவிலக்கல்லர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகச் சுப்பிரமணிய தேசிகர் இருந்த காலத்தில் குமாரசாமித் தம்பிரான் வேண்டுகோளை ஏற்று மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை சிவஞான முனிவர் வரலாற்றைப் பாடத் தொடங்கினர். எனினும் அது முற்றுப்பெறவில்லை. துறைசையாதீன வரலாற்றுடன் ஏறத்தாழ நூற்றிருபது பாட்டுக்களுடன் அது நின்றுவிட்டது. சுவாமிகளின் "தருக்க சங்கிரகமும் அதனுரையாகிய தருக்க சங்கிரக தீபிகையும்" என்னும் நூலை யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பதிப்பித்த போது இவ்வறிஞரே அதற்குச் சிறப்புப் பாயிரம் ஒன்று அளித்துள்ளார். அதில் சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு ஓரளவு குறிக்கப் பெற்றுள்ளது. அவ்வரலாற்றுக் குறிப்புக்களுடன் சுவாமிகளுடைய நூல்களையும் செவிவழிச் செய்திகளையும் சேர்த்து இன்று ஓரளவு அவருடைய வாழ்க்கையை நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

சிவஞான சுவாமிகள் தென்பாண்டி நாட்டிலுள்ள விக்கிரமசிங்கபுரம் என்ற ஊரில் தோன்றியவர். பொதியமலைச் சாரலை அடுத்துள்ள பாவநாசம் என்னும் திருப் பதிக்கு அருகில் இவ்வூர் உள்ளது. அவருடைய தந்தையார் ஆனந்தக் கூத்தர். அன்னை யார் மயிலம்மை. ஏழு தலைமுறைகள் அருட்புலமை நிரம்புமாறு அகத்தியரிடம் வரம் பெற்ற குடி இக்குடி எனக் கூறுவர். சுவாமிகள் ஏழாவது தலைமுறையென்றும் கூறப்படு கின்றது. நல்ல சைவக் குடும்பத்தில் பிறந்த அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முக்களாலிங்கர் என்பதாகும்.

"விளையும் பயிர் முளையிலே" என்பது பழமொழி. இதனை விளக்கும் நிகழ்ச்சி யொன்று சுவாமிகளின் இளமை வாழ்க்கையில் காணப்படுகின்றது. முக்களாலிங்கர் கல்வி கற்கத் தொடங்கிய இளம் பருவத்தே ஒருநாள் கல்வி கற்றுத் திரும்பும் போது வழியில் திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரான்கள் சிலரைக் கண்டார். அவர்களுடைய காவியுடையும் கண்டிகையும் வெண்ணீறும் அவரைக் கவர்ந்திழுத்தன. அவ்வளவில் குடும்பப் பண்பாட்டிற்கேற்ப அவர்களைப் பணிந்து வணங்கித் தம்மில்லத்தில் திருவமுது செய்ய அழைத்தார். அவர்களும் அவருடைய அழைப்பைக் கண்டு வியந்து உடன் சென்ற னர். வீட்டில் தந்தையார் இல்லை. எனினும் அன்னையார் விரைவில் திருவமுது செய்து தம்பிரான்களுக்குப் படைத்தார். அன்னையாரின் இச்செய்கையைப் புகழ்ந்து,

"அருந்ததிஎன் அம்மை அடியவர்கட்கு என்றுந்
திருந்த அமுதளிக்கும் செல்வி – பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெய்யும்
மானந் தவாத மயில்."

எனச் சுவாமிகள் பாடியதாக ஓர் வெண்பா வழங்குகின்றது.

சற்று நேரத்திற்குப் பின் வீடு திரும்பிய தந்தையார் நடந்ததை யறிந்து புதல்வ ருடன் தம்பிரான்களைக் காண அவர்கள் தங்கியிருந்த திருமடத்திற்குச் சென்றார். அங்குத் துறவுநிலை யடைய விரும்பும் தம் விருப்பத்தை முக்களாலிங்கர் கூறினார். புதல்வரைப் பிரியத் தந்தை தயங்கினாரேனும் சற்றும் தடை சொல்லாமல் அவரை அத்தம்பிரான் களோடு அனுப்பி வைத்தார்.

அவர்களனைவரும் அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனச் சின்னப்பட்டத்துத் தம்பிரானாகிய பின்வேலப்ப தேசிகர் எழுந்தருளியிருந்த சுசீந்திரம் சென்றனர். அவர் அவருக்குச் சிவதீக்கை செய்து, காவியுடை தந்து, சிவஞான யோகிகள் என்னும் தீக்கைப் பெயரும் தந்தார். சைவசித்தாந்தத் திறவுகோல்களாகிய மெய்கண்ட சாத்தி ரங்களையும் பண்டார சாத்திரங்களையும் தம் ஞானாசிரியராகிய இவரிடமே சுவாமிகள் கற்றார்.

"எவ்வெவர்கோட் படுபொருளும் அஞ்செழுத்தின்
அடக்கி அவற்று இயல்பு காட்டி
மெய்வகைஅஞ் சவத்தையினும் நிற்குமுறை
ஓதுமுறை விளங்கத் தேற்றி
அவ்வெழுத்தின் உள்ளீடும் அறிவித்துச்
சிவபோகத்து அழுத்தி நாயேன்
செய்வினையுங் கைக்கொண்ட வேலப்ப
தேசிகன்தாள் சென்னி சேர்ப்பாம்"

எனத் தம் ஞானாசிரியரை அவர் காஞ்சிப் புராணக் கடவுள் வாழ்த்தில் போற்றியுள்ளார். "பலகலை ஆகமம் வேதம் யாவையினுங் கருத்துப் பதிபசு பாசம் தெரித்தல்" என்ற

சிவப்பிரகாசத்தின் கருத்து, "எல்லாச் சமயத்தாராலும் கொள்ளப்படும் பொருள்களும் திருவைந்தெழுத்தின் பொருள்களான முப்பொருள்களே" என இங்கு மேலும் விளக்கம் பெற்றிருப்பதை நாம் உணரலாம்.

தீட்சை பெற்றபின் சுவாமிகள் தொண்டை நாட்டுத் திருப்பதிகளை வணங்கிவரப் புறப்பட்டார். அப்போது மணலிச் சின்னையா முதலியார் என்பவர் அவரது வடமொழிப் பயிற்சிக்கு உதவி புரிந்ததாக ஒரு செவிவழிச் செய்தி கூறுகின்றது. சுவாமிகளின் வட மொழி கற்கும் வேட்கையை உணர்ந்த சின்னையா முதலியார் வடமொழி வாணரை அழைப்பித்துத் தம் கருத்தை எடுத்துரைத்தார். அவர்களோ சாதி வேற்றுமை காட்டி மறுத்துவிட்டனர். முதலியாரோ விடாமல் திருவுளச் சீட்டு போட்டுப் பார்க்குமாறு கேட்டுக் கொண்டனர். இறுதியில் கற்பிக்கக் கூடாது என்றெழுதி நூறு சீட்டுக்களும் கற்பித்தல் கூடும் என்றெழுதிய ஒரேயொரு சீட்டும் போட்டுத் திருவுளச் சீட்டெடுப்பது என முடிவாயிற்று. அவ்வாறே எடுத்துப் பார்க்க, கற்பித்தல் கூடும் என்ற சீட்டே வந் தது. இதன் மேல் யாதொரு மறுப்பும் சொல்லாமல் வேதம், வேதாந்தம், மீமாஞ்சை, தர்க்கம், வியாகரணம் முதலிய அனைத்தையும் அவர்கள் சுவாமிகளுக்குக் கற்பித்தனர். வைதிகப் பக்கத்தினர் பொதுவாக அறியாத சிவாகமங்களையும் சுவாமிகள் இக்காலத்தில் கற்றுணர்ந்தார். தென்மொழி வடமொழிகளில் இக்காலத்தில் இவர் பெற்ற பேரறிவே மாபாடியம் முதலிய அனைத்திலும் பாய்ந்து அவற்றை வளம் கொழிக்கச் செய்துள்ளது.

சுவாமிகளுடைய நூல்களை வைத்துப் பார்க்கும்போது சென்னை, காஞ்சி, குளத் தூர், இளங்காடு, தொட்டிக்கலைசை, துறைசை முதலிய பல இடங்களில் அவர் தங்கி யிருந்ததாகத் தெரிகின்றது.

சுவாமிகளுடைய வாழ்க்கை அருளும் அறிவும் செறிந்ததொரு வாழ்க்கை. இவ் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் நடந்ததாக அறிகிறோம். அவை அவருடைய பல்வேறு சிறப்புக்களை அழகாக உணர்த்துகின்றன.

இவற்றில் ஒரு நிகழ்ச்சி திருப்பாதிரிப்புலியூரில் நடந்ததாகத் தெரிகின்றது. சுவாமிகள் அங்கு தங்கியிருந்தபோது, "கரையேற விட்ட முதல்வா உன்னையன்றியுமோர் கதியுண்டாமோ?" என்ற ஈற்றடி தந்து, அதற்கேற்ப ஒரு செய்யுள் இயற்றுவோர்க்கு நூறு பொன் கொண்ட பொற்கிழி ஒன்று தருவதாக வள்ளல் ஒருவர் அறிவித்திருந்தார். வறியவன் ஒருவன் பொற்கிழி பெறும் ஆசையுடன் சுவாமிகளை அணுகினன். அவரும்,

"வரையேல் தவிட்டமுதம் சேந்தனிட
அருந்தினை; வல் லினம்என் றூலும்
உரையேற விட்ட முதல் ஆகுமோ?
எனைச்சித்தென் றுரைக்கின் என்னும்?
நரையேறு அவிட்டமுதல் நாளவனைக்
கொண்டுநறும் புலிசை மேவுங்
கரையேற விட்டமுதல்வா உன்னை
அன்றியும் ஓர் கதியுண் டாமோ?"

என்றொரு செய்யுள் எழுதித் தந்தார். வறியவனும் பொற்கிழி பெற்றுத் தன் வறுமை தீர்ந்தான்.

உயிர் அறிவுப் பொருள் என்பது சைவசித்தாந்தக் கருத்து. எனினும் அறிவிக்கவே அது அறியும். சார்ந்ததன் வண்ணம் நின்றலே அதன் இயல்பு. இதனை இச்செய்யுளில் ஓர் அருமையான உவமையின் மூலம் சுவாமிகள் விளக்கியுள்ளார். ற, ட எனும் மெய்கள்

வல்லின மெய்களாக இருப்பினும் மொழிக்கு முதலில் வாரா. உயிரை அறிவுப் பொருள் என்பதும் இதுபோலத்தான் எனச் சுவாமிகள் விளக்குவதன் மூலம் உயிரின் அறிவு நிலையைச் சைவசித்தாந்த அடிப்படையில் மிகத் தெளிவாகப் புலப்படுத்தி விடுகிறார்.

சைவசித்தாந்தத் தத்துவத்தில் தோய்ந்து திளைத்த சுவாமிகள் திருவாசகம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய பக்திப் பனுவல்களிடம் பெருமதிப்புக் கொண்டவர். புராணங்கள் இரண்டையும் தமது படுக்கையின் இருபுறத்தும், திருவாசகத்தை நெஞ்சிலும் வைத்து அவர் படுப்பார் என அவரை அறிந்தவர்கள் கூறியுள்ளனர்.

சுவாமிகள் வாழ்க்கையைப் பற்றி இத்தகைய சில நிகழ்ச்சிகள் தெரிவதல்லாமல், அவருடைய முழு வாழ்க்கையோ அல்லது வாழ்ந்த காலமோ உறுதியாகத் தெரியவில்லை. அவருடைய காலத்தையொட்டி இரண்டே இரண்டு குறிப்புக்கள் மட்டுமே தெளிவாகத் தெரிகின்றன. முதலாவது, அவருடைய திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் இயற்றிய ஆண்டாகும். ஆசிரியர் காலத்திலேயே இயற்றப்பட்ட சிறப்புப் பாயிரம் ஒன்று நூலுடன் காணப்படுகின்றது. அதில்,

"இலகுசகன் ஈரெட்டு நூற்றுநாற் பத்தேழி
   னிற்கரங் கும்பமிருபத்
தேழிரே வதிவெள்ளி பூர்வபக் கத்துதியை
   யேர்க்கவுல வஞ்சுப்பிரம்
கலவியுறு சுபதினங் கன்னிலக் கினமதிற்
   கலைசைப் பதிக்குள்வாழ்செங்
கழுநீர் விநாயகர்த மீதுபிள் ளைத்தமிழ்க்
   கவிபாடி வாஞேருண
அலைமலி கடற்கடைந் தமுதூட்டு மாலென்ன
   அவனியிற் புலவர்செவியால்
ஆர்ந்திடத் துறைசைவாழ் சிவஞான தேசிகன்
   அரங்கேற்றி ஞன்............"

என இந்நூல் இயற்றப்பட்ட காலம் குறிப்பிடப்படுகின்றது. இது சாலிவாகன சகாப்தம் 1694-ஆம் ஆண்டு கரவருடம் மாசி மாதம் இருபத்தேழாம் தேதி ஆகும். இதற்கு நிகரான ஆங்கில ஆண்டு கி.பி. 1772 ஆகும். சுவாமிகளின் நூல்களிலேயே இயற்றப் பட்ட காலம் இந்நூல் ஒன்றுக்கு மட்டுமே தெரிகின்றது. இரண்டாவது குறிப்பு, அவர் முத்தியடைந்த நாளைக் குறிப்பிடும் ஒரு வெண்பாவில் காணப்படுகின்றது.

"மன்னு விசுவாவசு வருட மேடமதி
உன்னிரவி நாட்பகல்ஒது ஆயிலியம் — பன்னுந்
திருவாளன் எங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கு தினம்"

என்பது அவ்வெண்பா. இதன்படி, சாலிவாகன சகாப்தம் 1708 விசுவாவசு ஆண்டு சித்திரைத் திங்கள் எட்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமையே சுவாமிகள் முத்தியடைந்த நாள். இதற்கு நிகரான ஆங்கில நாளைக் கணக்கிடும் போது அது 1785-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினேழாம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகின்றது. ஆயிலியம் என்ற குறிப் பைக் கொண்டு அன்று பகல் ஒன்றே முக்கால் மணிக்கு அவர் முக்தியடைந்தார் எனக் கொள்ளலாம். இவ்விரு குறிப்புக்கள் அல்லாமல் வேறு காலக் குறிப்புக்கள் இல்லாமை யால் அவர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என உறுதியாகக் கூற முடியவில்லை. சிலர் முப்பத்திரண்டு ஆண்டுகள் அவர் வாழ்ந்தார் என்பர். வேறு சிலர் இன்னும் அதிக காலம் வாழ்ந்ததாக எழுபது ஆண்டுகள் வரை கூறுவர். எனினும் அதனை உறுதிப்படுத்த இயலாது.

தம்மளவில் தாம் சிறந்த ஞானியாக இருந்தும், தமக்கு ஞானசிரியராக விருந்த வேலப்ப தேசிகரையும் கடவுளையும் சுவாமிகள் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. முத்தியடையும் காலம் நெருங்கியபோது நடந்த நிகழ்ச்சியொன்று இதனை உணர்த்தும். சுவாமிகள் தம்மைப் பிரியுங் காலம் நெருங்கியதறிந்த ஆதீனத் தலைவர் கலங்கினர். சுவாமிகளோ அவருடைய திருவடிகள்லேயே தாம் சேர்வதாகக் கூறி அவரைத் தேற்றினார். இறைவனுடைய திருவடிகளாகவே குருவின் திருவடிகளை அவர் மதித்ததை இந் நிகழ்ச்சி தெளிவாகக் காட்டுகிறது.

ஆழ்ந்து அகன்ற அறிவினராகத் திகழ்ந்த சுவாமிகள் எளிமையே வடிவமாக வாழ்ந்தவர். இறைவனை வணங்குவதேயே வாழ்க்கையாக அமைத்துக் கொண்டவர். ஒரு முறை அவரைத் திருவாவடுதுறைத் தம்பிரானாக இருக்கும்படிப் பலரும் வேண்டினர். அவரோ, "நாம் வணங்கவே பிறந்தோம்; பிறர் வணக்கத்தைப் பெற அன்று" என்று கூறி மறுத்து விட்டார். இறைவனிடம் இத்தகைய பேரன்பு கொண்டவராகத் திகழ்ந்தார் சுவாமிகள். இவருடைய மாணவர்களில் ஒருவரான தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முதலியார் சுவாமிகளின் திருவுருவத்தை அப்படியே தம் சொற்களில் ஓவியமாக்கிப் பதிந்து வைத்துள்ளார்.

"திண்ண இன்பச் சேவடியும் திருவிழியும்
திருமார்பும் செல்வக் கையும்
நண்ணும் அன்பர்க் கருள் கருணைத்
திருமுகமும் பசுங்குழவி நடையே ஆகிப்
புண்ணியத்தின் பொலிவாகி அற்புதக்கோ
லக்கொழுந்தாய்ப் புலைநா யேற்குக்
கண்ணைவிட்டு நீங்காத சிவஞான
சற்குருவே கருணை வாழ்கவே"

என்பது அச்சொல்லோவியம். இவருடன் சேர்த்துச் சுவாமிகளுக்குப் பன்னிரண்டு மாணவர்கள் இருந்ததாகத் தெரிகின்றது. திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர், காஞ்சிச் சிதம்பர முனிவர், இலக்கணம் சிதம்பரநாத முனிவர், காஞ்சி முத்துக்குமார தேசிகர், காஞ்சிச் சரவணபத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரப் பிள்ளை, திருமுக்கூடல் சந்திர சேகர முதலியார், காவாந்தண்டலம் அடைக்கலங்காத்த முதலியார், கடம்பர்கோவில் கலியாணசுந்தர உபாத்தியாயர் முதலியோர் சுவாமிகளின் மாணவர்கள். இவர்கள் அல்லாமல் வேறு சில மாணவர்களும் இருந்திருக்கின்றனர். இவர்களில் தலையானவர் திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர். தணிகைப் புராணம், விநாயக புராணம் என்னும் புராணங்கள் இவரால் இயற்றப்பட்டவையே ஆகும்.

சுவாமிகளுடைய திருவுருவச் சிலையொன்று விக்கிரம சிங்கபுரத்தில் உள்ளது. இதனை நிறுவியவர் சுப்பிரமணிய தேசிகர்.

## நூல்களும் சிறப்புக்களும்

சிவஞான முனிவர் அவர் காலத்து வாழ்ந்த தமிழ் அறிஞர்களிலே தலைமையானவர். அறிவே வடிவானவர். அவருடைய அறிவுத் திறனை விளக்கும் வகையில் இன்று இருபத்தொன்பது நூல்கள் காணப்படுகின்றன. இலக்கணம், இலக்கியம், மொழி பெயர்ப்பு, சைவ சித்தாந்தம், கண்டனம் என அந்நூல்களின் பொருளுக்கேற்ப அவற்றை வகைப்படுத்தலாம். இவற்றை ஒரு சேர ஆராயும் போதே சுவாமிகளின் பன்முகப் பேரறிவினை நாம் ஒருவாறு அறிந்து தெளிய முடியும்.

இலக்கணம்: தொல்காப்பியச் சூத்திர விருத்தி, சங்கர நமச்சிவாயர் எழுதிய நன்னூல் விருத்தியுரைத் திருத்தம் என்னும் இரண்டு நூல்களும் சுவாமிகளின் இலக்கணப் புலமைக்குச் சான்ருக நிற்கும் நூல்கள்.

இவற்றுள் முதல் நூல் தமிழின் முதல்பெரும் நூலான தொல்காப்பியத்திற்கு ஒரு விருத்தியுரை செய்ய ஆசிரியர் மேற்கொண்ட முயற்சியின் ஒரு சிறு பகுதியே ஆகும். தொல்காப்பியம் முழுவதற்கும் உரை எழுதப் போந்த சுவாமிகள், அதன் பாயிரத்திற்கும் மட்டுமே உரையெழுதி முடித்துள்ளார். அதனைத் தொடரு முன்னம் சுவாமிகளின் நாட்டம் சிவஞான போதத்தின் பக்கம் திரும்பிவிடவே, உரை இவ்வளவில் நின்றுவிட்டது.

தொல்காப்பியப் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற்குமே இவ்விருத்தியுரை அமைந்துள்ள தென்ருலும், சுவாமிகளின் இலக்கணப் புலமையையும் ஆராய்ச்சித் திறனையும் இவ்வுரை ஒருங்கே புலப்படுத்தி நிற்கின்றது. அவருக்கு முன்னம் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய உரையாசிரியர்களின் கருத்துக்களை நன்கு ஆராய்ந்து, மறுக்க வேண்டிய இடத்தில் மறுத்து, சுவாமிகள் உரையெழுதியுள்ள திறம் வியத்தற்குரியது. ஐந்திரம் என்ற வட நூலின் வழியில் வந்தது தொல்காப்பியம் என்ஞெரு கருத்து அதுவரை தமிழறிஞர் சிலரிடம் நிலவி வந்தது. இதனைச் சுவாமிகள், "ஐந்திர நோக்கித் தொடுத்தானெனின், தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கையுங் குறியீடுகளும், வினைக்குறிப்பு வினைத் தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும் இவையெல்லாம் தாமே படைத்துக் கொண்டு செய்தாரெனின், முந்து நூல் கண்டென்பதனோடு முரணுதலானும், முற்காலத்து முதனூல் அகத்தியமென்பதும் அதன் வழித்தாய தொல்காப்பியம் அதன் வழிநூல் என்பதூஉம் துணியப்படும் என்க" எனத் தம் உரையுள் மறுக்கிறுர். இத்தகைய நுட்பமான உரைப் பகுதிகள் பல இதனுள் காணப்படுகின்றன.

தொல்காப்பியத்திற்குப் பின்வந்த இலக்கண நூல்களில் தனியிடம் பெறுகின்ற நன்னூலுக்குச் சங்கர நமச்சிவாயப் புலவர் இயற்றிய விருத்தியுரைக்குச் சுவாமிகள் செய்த திருத்தங்கள் அடுத்த நூலில் காணப்படுகின்றன.

இலக்கியம்: நுணுகி நுணுகி ஆராய்தலை அடித்தளமாகக் கொண்ட இலக்கண ஆராய்ச்சியில் சிறந்து நின்ற சுவாமிகள், கற்பனையும் உணர்ச்சியும் சிறந்து நிற்கும் இலக்கியப் படைப்பிலும் முதல்வராக நிற்கிறுர். அவர் அருளியனவாக இன்று பதின்மூன்று இலக்கிய நூல்கள் காணப்படுகின்றன. அகிலாண்டேசுவரி பதிகம், இளசைப் பதிற்றுப்பத் தந்தாதி, கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம், கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், கலைசைப் பதிற்றுப்பத் தந்தாதி குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், குளத்தூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி, திருத்தொண்டர் திருநாமக்கோவை, திருமுல்லைவாயில் அந்தாதி, திருவேகம்பர் அந்தாதி, திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு, பஞ்சாக்கர தேசிகர் மாலை, சோமேசர் முதுமொழி வெண்பா என்பவை அவை. சொற்சுவை, பொருட்சுவை முதலிய அனைத்திலும் இவை சிறந்து நிற்கின்றன. சுவாமிகளின் கற்பனைத் திறன், சொல்லாற்றல் ஆகியவற்றை மட்டுமன்றி, அவருடைய தேர்ந்த சைவ சித்தாந்த ஞானத்தையும் இந்நூல்கள் மிகச் சிறப்பாகக் காட்டி நிற்கின்றன.

பல்வேறு சமய தத்துவங்களை ஆராய்ந்ததில் வீடு பேற்றை அளிக்கவல்லது சைவ சித்தாந்தம் ஒன்றே எனத் தாம் இறைவன் அருளால் தெளிந்ததாகக் கலைசைப் பதிற்றுப்பத் தந்தாதியில் சுவாமிகள் குறித்துள்ளார்.

"மாறினேன் சமய பேத
வழிப்படும் புன்மை யெல்லாம்;
தேறினேன் வீடு சேர்க்கும்
சைவசித் தாந்தம் என்றே;
ஏறினேன் சிவலோ கத்தே
இரண்டறக் கலந்தொன் ருகி
ஆறினேன் வருத்த மெல்லாம்
கலைசைக் கோஅரு ளிஞலே"

என்பது அவர் பாடல். அகச் சமயம், அகப்புறச் சமயம், புறச் சமயம், புறப்புறச் சமயம் என நான்கு வகையாக விரியும் சமய நெறிகளையெல்லாம் சுவாமிகள் எந்த அளவிற்குக் கற்றுத் தேர்ந்து ஆராய்ந்துள்ளார் என்பதை அவருடைய மாபாடியப் பெரு நூலிலும் மற்ற நூல்களிலும் விரிவாகக் காணலாம்.

இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனைத் தாம் தெளிந்த சைவ சித்தாந்தப் பேருண்மைகளை யெல்லாம் தம் நூல்களில் உரிய இடங்களில் அவர் தெளிவாகக் குறித்து வைத்துள்ளார். இறைவனைப் போல் ஆன்மாவும் அநாதி என்ற உண்மையை,

"நீயுள்ள தென்று அன்று நானுமுளன் அன்றுமுதல்
நீங்காமல் என்னிடத்தில் நேசம் வைத்தே நீயிருக்க"

என அவர் திருவேகம்பர் ஆனந்தக் களிப்பில் குறித்துள்ளார். எனினும் ஆன்மா இறைவனைப் போல் முற்றறிவினது அல்ல. செம்பில் களிம்புபோல் இயல்பிலேயே மலங்கள் அதனைப் பற்றியுள்ளன. சார்ந்ததன் வண்ணம் நிற்பது அதன் இயல்பு. ஆன்மாவின் இலக்கணங்களிலே இவை இரண்டும் முதன்மையானவை. இவற்றை,

"களிம்புதோய் செம்பெனக் கலந்த மாசினிற்
பளிங்கெனக் கிடந்த இப்பாவியேன்"

என்ற குளத்தூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி அடிகளில் அவர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சைவ சித்தாந்த உண்மைகள் பலவற்றை இந்நூல்களில் பரக்கக் காணலாம்.

பதி இலக்கணங்களில் அவன் பேரளவு எப்போதும் முதன்மையாகக் கருதக் கூடியது. அண்டங்கள் எல்லாம் அணுக்களாகத் தெரியும் வண்ணம் பேருருவானவன் அவன். இச்சிறப்பினைச் சுவாமிகள் பல பாடல்களில் மிக அழகாக விளக்கியுள்ளார்.

"ஆயி ரஞ்சிரம் ஆயிரம் முடிகள் ஆயிரஞ் செவி
ஆயிரம் விழிகள்
ஆயி ரம்புயம் ஆயிரஞ் சரணம் ஆயிரங் குணம்
ஆயிரந் தொழில்கள்
ஆயி ரம்பெய ருடையநின் பெருமைஐய என்மொழிக்கு
அடங்கு மோபத்தி
ஆயி ரந்தவர்க் காயென உதவும் அங்கணதிருக்
கலசைமுக் கணனே"

என்ற கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதிப் பாடல் அவ்வாறமைந்த ஒரு பாடல். இவ்வாறு பேரளவினனாக நிற்கும் அவன் எளிவந்த பிரானாக அன்பர் நெஞ்சில் நிற்கும் உண்மையும்,

"உடைந்து நைந்து நெக்குநெக்கு
உளங்குழைந்து, சின்மயத்து
அடைந்து, கண் அகம் பிருந்து
தாரை பாய, அன்பு நீர்

குடைந்து வாழும் அன்பர் சிந்தை
கோயில் கொண்டு வாழ்வரான்
மடந்தை பாகமாய்க் கலைசை
வாழ் சிதம்ப ரேசரே."

என்ற பாடலில் வெளிப்பட்டுள்ளது. மகத்துக்கு மகத்தாயும் நுண்மைக்கு நுண்மை யாயும் விளங்கும் இறைவன் அவனை வழிபட்டு உய்வதற்காகவே வாய் முதலாகிய உறுப்புக்களைத் தந்தருளி இருப்பதையும் சுவாமிகள் மறக்கவில்லை.

"துதிப்பதற்கு வாய் அமைத்தாய்;
சூழ்வதற்குத் தாள் அமைத்தாய்;
மதிப்பதற்கு மனம் அமைத்தாய்;
வணங்கு தற்குத்தலை அமைத்தாய்;
கதிப்பதற்கு நூல் அமைத்தாய்;
கடிக்குளத்தூர் அமர்ந்து அறிவின்
உதித்த உனக்கு அடியேங்கள்
உதவுவதென் கைம் மாறே?

என அவர் இறைவனிடம் கேட்கிறார். இவ்வாறு இறைவன் அருளைப் பெறாமல் வேறு எத்தவம் செய்தாலும் அதனால் பயனில்லை என அவர் மிக அழுத்தமாக வற்புறுத்தி யுள்ளார்.

"வனந்தோ றலைந்து விரதங்கள் பூண்டு
சடைகட்டி வாட லுறினும்,
தனஞ்சேர்ந் துயர்ந்த குலத்திற் பிறந்து
சதுர்வேதம் ஓதி வரினும்,
தினஞ்சாத் திரங்கள் பலகற்று வாது
செயவல்ல ரேனும் எவனே
மனந்தாதி யான கலைசைச் சிவன்தன்
அருளைப் பெறாது விடினே?"

என்பது கலைசைப் பதிற்றுப்பத் தந்தாதிப் பாடல்.

உலகைப் படைத்தளித்துக் காக்கும் நான்முகன், திருமால் உருத்திரன் ஆகிய மும் மூர்த்திகளும் முழுமுதற் கடவுளல்லர் என்ற பேருண்மையையும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படையில் சுவாமிகள் தம் நூல்களில் பல இடங்களில் விளக்கியுள்ளார். இம்மூவ ரையும் தொழிற்படுத்துபவன் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே என்றும், தங்கள் புண்ணியத்தாலேயே இவர்கள் இவ்வதிகாரத்தைப் பெற்றனர் என்றும்,

"மாய னயினை; மறையவன் ஆனாய்;
மன்னு யிர்த்தொகை அனைத்தையும் ஒடுக்கும்
பாயு மால்விடை உருத்திரன் ஆனாய்;
மூவர்க்கு மூலமாய் நின்றாய்"
"முக்குணங்களின் மூவரைத் தோற்றி
மூவ ருக்குமுத் தொழில்வகுத் தருளி
அக்கு ணங்களுக்கு அதீதமாய் நிறைவாய்
அத்து வாக்களைக் கடந்துமேல் உலகில்
தக்க நற்கண நாதர் ஏத்தெ டுப்பச்
சத்தி அம்பிகை யுடன் அருளுருவாய்த்
தொக்க கோடி சூரியர் உதயம்போல்
தோற்றி நின்றனை கலசைவிண் ணவனே!"

என்ற பாடல்களில் ஐயத்திற் கிடமின்றி அவர் விளக்கியுள்ளார். ஒருபெருங் கடவுளாக ஓங்கி நிற்கும் சிவனே அண்டங்களுக்கும் ஏனை உயிர்களுக்கும் தலைவன் என்றும் அவனைப் பணிவதல்லால் வீடு பேற்றிற்கு வேறு வழியில்லை என்றும் அவர் விளக்கியுள்ள முறை சைவசித்தாந்திகள் மனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

சுவாமிகள் இயற்றிய குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், கலைசைச் செங் கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் என்னும் இரு நூல்களும் அவர் இலக்கியங்கள்லேயே தனித்து நிற்பவை. தத்துவக் கருத்துக்களும், புராண நிகழ்ச்சிகளும், கற்பனை அழகு களும் இந்நூல்களில் தெறிவாகக் காணப்படுகின்றன. மலையத்துவசன் மகளாகவும், தடாதகைப் பிராட்டியாகவும் உமை வந்தருளியபோது அவளது தோழியர்கள் அவ ளது அழகைப் புகழ்ந்து பாடிய பிள்ளைத் தமிழாக முதல் நூல் அமைந்துள்ளது. இரண் டாம் நூல் சைவ சித்தாந்தச் சாத்திரங்களின் அடிப்படையில் அமைந்த பல கற்பனை களைக் கொண்டது. பிள்ளையாருடைய ஒருவகை இருவினையொப்புடைய அடியார்களது கட்டினை அவிழ்க்க, மற்றொரு கை அவர்களுடைய உயிர் பொருள் உடல் பந்தம் முதலிய அனைத்தையும் வாங்கிக் கொண்டு விடுகிறது. அவர் இயல்பாகச் சப்பாணி கொட்டுவது கூட, இத்தொழில் வேறுபாட்டால் உண்டாகிய பகையின் காரணமாக ஏற்பட்ட போர் எனச் சுவாமிகள் கற்பனை செய்துள்ளார்.

"பக்குவ முதிர்ந்துசிவ புண்ணிய நிரம்பிமல
பாகம் பிறந்து சத்தி
பதிந்துவினை ஒப்புப் பழுத்தவர்கள் பந்தநோய்
பாற்றும் ஒரு செங்கை மலரும்
அக்கருணை அடியவர்கள் உயிருடன் பொருள்காயம்
ஆமெவ் வகைப் பந்தமும்
அங்கீக ரிக்குமோர் கைம்மலரு மாறுபாடு
ஆதரித் திடுசெய் கையான்
மிக்குறும் பகைமைமேன் மேலெய்தி யாங்கது
விலக்கத் தமக்கு உயர்ந்தோர்
மேதினிக்கு இன்மையால் போராட் டியற்கையின்
மெலியாமல் ஒன்றை ஒன்று
தக்கவகை தாக்குதல் கடுப்பக் கவின்செயவோர்
சப்பாணி கொட்டி அருளே
தங்குகலை சைப்பதிச் செங்குவளை நாயகன்
சப்பாணி கொட்டி அருளே"

என்ற அக்கற்பனை பொதிந்த பாடல் அவருடைய கவித்திறனுக்கு ஓர் அழகிய சான்றாகும்.

காஞ்சியில் உள்ள பல சிவ தலங்களில் ஒன்றாகிய ஆனந்த ருத்திரேசர் மீது சுவாமிகள் பாடிய பதினொரு அழகிய திருப்பாடல்களைக் கொண்ட சிறிய நூல் கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம். நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களுள் முதல்வராகிய ஆனந்தருத்திரரால் வழிபடப் பட்டமையின் சிவபிரானுக்கு ஆனந்த ருத்திரேசர் என் றொரு பெயர். ஐந்து அவாக்களையும் ஆறு உட்பகைகளையும் அடக்கிக் கடுமையான தவம் செய்யாவிட்டாலும், ஆனந்த ருத்திரேசரை வணங்கிட வாழலாம் என்று இந்நூலில் சுவாமிகள் உணர்த்துகிறார்.

"ஐந்தை ஆறினை அடக்கி அருந்தவம் புரியா ரேனும்
வந்துஐயா என எல்லோரும் வணங்கிட வாழலாமால்
முந்துஐ ஆறிரண்டு தன்மம் முதல்விசெய் மூதூர் வாழும்
எந்தை ஆனந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே"

என்பது இதனை உணர்த்தும் பாடல்.

"ஆனந்தம் ஆனந்தம் தோழி — கம்பர்
ஆடுந் திருவிளே யாட்டினைப் பார்க்கில்
ஆனந்தம் ஆனந்தம் தோழி"

என்று தொடங்கும் "திருவேகம்பர் ஆனந்தக் களிப்பி"ல் ஒன்று முதல் பத்து வரை இறைவனுடைய எல்லையற்ற ஆற்றல்களை எல்லாம் காட்டி அருளியுள்ளார்.

சுவாமிகள் இயற்றியுள்ள திருத்தொண்டர் திருநாமக் கோவை, சிவனடியார் பெயர்களை ஓதி வழிபடுவதற்குரிய ஒரு நூல். அக்காலத்தில் மார்கழித் திங்கள் திருவா திரைத் திருவிழா தொடங்கியவுடன், விழா நடக்கும் பத்து நாட்களிலும் திருவெம் நீங்கவே சுவாமிகள் இச்சிறு நூலை இயற்றினர். பெரியபுராண அடியவர்களின் திரு பாவை தவிர ஏனைய திருமுறைகளை ஓதமாட்டார்கள். இதனல் திருத்தொண்டர் திருப் பெயர்களை நாள்தோறும் மந்திரமாக ஓதும் வழக்கத்தையுடைய அடியவர்கள் தடை நாமங்களை நிரலே இந்நூலில் காணலாம்.

சுவாமிகள் இயற்றிய இலக்கிய நூல்களில் திருக்குறளின் அடிப்படையில் நின்று நீதிகளை அறிவுறுத்தும் நூல் "சோமேசர் முதுமொழி வெண்பா" ஆகும். திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒரு குறளைத் தேர்ந்தெடுத்து அதனை ஈற்றிரண்டடிகளிலும், அதன் பொருளை முதல் இரண்டடிகளிலும் அமைத்து அவர் பாடிய நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன. பெரியபுராணம், இராமாயணம், மகா பாரதம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், பாகவதம், காஞ்சிப்புராணம், கூர்ம புராணம், பிரபுலிங்க லீலை, பிரமோத்தர காண்டம், நைடதம், உபதேச காண்டம் முதலிய பல நூல்களிலிருந்து இவற்றிற்கான கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பு: இலக்கண இலக்கிய ஆசிரியராகத் தம் காலத்துப் புகழுடன் விளங்கிய சுவாமிகள், மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாற்றலும் பெற்றிருந்தார். வட மொழி, தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் ஒப்பற்ற புலமை பெற்றிருந்ததால் சில அரிய வடமொழி நூல்களை அவர் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். சிவ தத்துவ விவேகம், சுலோக பஞ்சகம், சித்தாந்தப் பிரகாசிகை, தருக்கசங்கிரகமும் தருக்கசங்கிரக தீபிகையும், காஞ்சிப் புராணம் ஆகியவை அவருடைய மொழிபெயர்ப்பு நூல்கள்.

இவற்றுள் சிவதத்துவ விவேகம் வடமொழியில் அப்பைய தீக்கிதர் என்ற சைவப் பெரியாரால் இயற்றப்பட்ட நூலின் மொழிபெயர்ப்பாகும். இவர் வடமொழியில் சைவ சமயத்தைப் பரப்புவதற்காக நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் இயற்றியவர். அவற்றில் இவ்வொரு நூலை மட்டுமே சுவாமிகள் மொழிபெயர்த்துள்ளார். சிவபெருமானே முழு முதற் கடவுள் என்றும், வேதங்கள் இதிகாசங்கள் மிருதிகள் புராணங்கள் முதலிய அனைத்தும் இதனையே உறுதி செய்வதாகவும் இந்நூல் கூறுகின்றது. சுலோக பஞ்சக மும் சிவபரத்துவம் காட்டும் ஒரு நூலேயாகும். அரதத்த சிவாச்சாரியார் வடமொழியில் இயற்றிய ஐந்து சுலோகங்களையே சுவாமிகள் அகவலாகத் தமிழில் வெளி யிட்டிருக்கிறர். காயத்திரி மந்திரத்திற்குரிய கடவுள் சிவபெருமானே என்று இதில் தெளி வாக விளக்கப்பட்டுள்ளது.

சுவாமிகளின் சித்தாந்தப் பிரகாசிகை ஓர் உரைநடை மொழிபெயர்ப்பு நூல், வடமொழியில் சித்தாந்தக் கருத்துக்களை விளக்கி சர்வான்ம சம்பு சிவாசாரியர் செய்த நூலை தமிழில் சுவாமிகளால் மொழிபெயர்க்கப்பட்ட நூல்.

"சைவா கமத்தின் மெய்யுணர் காட்சி
அருட்சர் வான்ம சம்புவா சிரியன்
தருசித் தாந்தப் பிரகா சிகையினை
அம்முறை மொழிபெயர்த்து அறைகுவன்
செம்மனத் தமிழோர் தெளிதரற் பொருட்டே"

என இதனை அவர் குறிப்பிட்டுள்ளார். தேகப் பிரகரணம், தத்துவப் பிரகரணம், அத்து வப் பிரகரணம், ஆன்மப் பிரகரணம், பந்தப் பிரகரணம், சாத்திரப் பிரகரணம், தீக்ஷாப் பிரகரணம் என்ற ஏழு இயல்கள் இதில் உள்ளன. சுவாமிகளின் உரைநடை எவ்வளவு தெளிவும் வலிவும் வாய்ந்தது என்பதற்கு இந்நூல் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆன்மப் பிரகரணத்தில் வரும், "ஆன்மாக்கள் ஆறு அத்துவாவுக்கும் வேறாய், நித்தியமாய், வியாபகமாய்ச், சேதனமாய்ச், சரீரந் தோறும் வொவேறாய், வினை களைச் செய்து வினைப்பயன்களை நுகர்வோராய்ச், சிற்றறிவுஞ் சிறுதொழிலும் உடைய வராய்த், தமக்கொரு தலைவனை உடையவராயிருப்பர். இந்த ஆன்மாக்கள் பந்த வேறு பாட்டாற் சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என மூவகைப் படுவர்" என்ற பகுதி இதனை உணர்த்தும்.

மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் என்ற வைதிக சாத்திரம் ஆறனுள் நியாயம், வைசேடிகம் என்னும் இரண்டும் தருக்க சாத்தி ரங்களாகும். பொருள்களைப் பொதுவாகப் பகுத்தறிந்து ஆராய இச்சாத்திரங்கள் துணை நிற்கின்றன. அன்னப்பட்டர் என்ற ஒரு தெலுங்குப் புலவர் இவற்றைத் தருக்க சங்கிரகம் என்ற பெயரில் ஒரு நூலாகச் செய்தார். நியாய போதினி, நிருத்தி, சித்தாந்த சந்திரோதயம், தருக்க சங்கிரக சந்திரிகை முதலிய பல வியாக்கியானங்கள் இந்நூலுக்கு உள்ளன. எனினும் நூலாசிரியராலேயே செய்யப்பட்ட தருக்கசங்கிரக தீபிகை என்னும் வியாக்கியானமே அனைத்திலும் சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம் என்னும் ஏழு பொருள்களைப் பற்றி ஆராயும் இந்நூலையும், அதற்கு ஆசிரியர் செய்த வியாக்கியானத்தையும் சுவாமி கள் அழகிய தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இவையனைத்தையும் விடச் சுவாமிகளால் மொழிபெயர்க்கப்பட்ட காஞ்சிப் புரா ணமே ஒப்பும் உயர்வும் அற்றதொரு பெருநூலாகக் காணப்படுகின்றது. தாம் வட மொழியில் உபநிடதங்களிலும் புராணங்களிலும் இதர நூல்களிலும் கண்ட அரும் பெருங் கருத்துக்களையும் சிவாகமப் பொருள்களையும் சைவ முறைகளையும் இந்நூலில் அவர் பொதிந்து வைத்துள்ளார். பல உபநிடத வாக்கியங்களையும் புராண உரைகளையும் அழகாக மொழிபெயர்த்திருப்பதுடன், சிவ மந்திரங்களுக்கும் அவர் இதில் பொருள் கூறியுள்ளார். சைவ சித்தாந்த சாத்திரங்களின் கருத்துக்களைக் காஞ்சிப் புராணத்தின் துணையுடன் எளிதில் அறிய முடியும் என்பது அறிஞர் கருத்து. "சுருங்கச் சொல்லின், திருமுறைகளின் பொருளையறிதற்குப் பெரிய புராணம் இன்றியமையாதவாறு போல, மெய்கண்ட நூல்களின் பொருளை யாவரும் எளிதில் விளங்க அறிதற்கும், உபநிடதம் முதலிய வடநூல்களுக்கு உண்மைப் பொருள் காண்டற்கும் இக்காஞ்சிப் புராணம் இன்றியமையாததாகும்" எனச் சைவ சித்தாந்த அறிஞர் சி. அருணை வடிவேல் கூறு கிறார். இப்புராணத்தின் முதற் காண்டம் சிவஞான சுவாமிகளாலும் அடுத்த காண்டம் அவருடைய மாணவராகிய கச்சியப்ப முனிவராலும் பாடப்பெற்றுள்ளன.

தேவாரம் ஓதுமுன் திருச்சிற்றம்பலம் எனச் சொல்லித் தொடங்கும் மரபைக் காஞ்சிப் புராணத்தை ஒட்டியே நிகழ்ச்சியொன்று மேலும் உறுதி செய்கிறது. சுவாமி கள் தாம் இயற்றியருளிய காஞ்சிப் புராணத்தை அக்கால வழக்கப்படி புலவர் பலரும் சங்கிரகம் என்ற பெயரில் ஒரு நூலாகச் செய்தார். நியாய போதினி, நிருத்தி, சித்தாந்த சிற்றம்பலமுடையார் வணக்கத்தைக் கூறி அவர் தொடங்கவும், புலவர் ஒருவர் எழுந்து,

அத்தலத்திற்கேற்ப திருவேகம்பமுடையார் வணக்கத்தை ஏன் முதலில் வைக்கவில்லை எனக் கேள்வி எழுப்பினர். சுவாமிகள் பதிலேதும் கூறுமல் ஆங்கிருந்த அத்தல ஓது வாரை அழைத்தார். காஞ்சித் தேவாரத்தைப் பாடுமாறு பணித்தார். அவரும் திருச் சிற்றம்பலம் என்று சொல்லித் தேவாரம் பாடத் தொடங்கினர். அவ்வளவில், சுவாமி களின் மாணவராகிய கச்சியப்ப சுவாமிகள், "இவ்வோதுவார் இத்தலத்திற்கேற்பப் "பிருதிவியம்பலம்" என்று சொல்லித் தொடங்காமல் "திருச்சிற்றம்பலம்" என்று சொல் லிதி தொடங்குவது முறைதானே?" என்று கேட்டார். கேள்வி கேட்ட புலவர் தலை தாழ்த்தினர்.

காஞ்சிப் புராணம் முழுவதும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் விரவியுள்ளன. அதிலும் "தழுவக் குழைந்த படலம்" சைவ சித்தாந்தப் பேருண்மைகளின் பெரும் புதையலாகவே திகழ்கின்ற தென்னலாம். முப்பொருள் உண்மை, நான்கு பெருநெறிகள் முதலிய யாவும் இப்படலத்தில் விளக்கம் பெறுகின்றன. தமிழ்மொழியின் ஒப்பற்ற சிறப் பும் இதில் பேசப்படுகின்றது. எத்தகைய வினையையும் ஒட்டும் மொழி தமிழ் எனச் சுவாமிகள் கூறியுள்ளார். "த்ரு" என்னும் தாது ஒட்டுதல் என்னும் பொருளுடையது. தமிழைக் குறிக்கும் திராவிடம் என்ற வடசொல் இத்தாதுவினின்றே பிறந்தது என்பது அவர் கருத்து.

"எவ்வினையும் ஒப்புதலால் திராவிடம்என் றியல்பாடை
எவ்வமறப் புதிதாக யான்வகுப்ப நல்கிஅது
எவ்வருணத் துள்ளார்க்கும் எளிதாகப் புத்தேளிர்
எவ்வெவர்க்கும் சுவைஅமிழ்தின் இனிதாகச் செய்தருளாய்.
மூன்றுறழ்ந்த பதிற்றெழுத்தான் முழுவதுவாய் உனக்கினிதாய்த்
தோன்றிடும்அத் தமிழ்ப்பாடைத் துதிகொண்டு மகிழ்ந்தருளி
ஆன்றவரம் எல்லார்க்கும் இவ்வரைப்பின் அளித்தருளாய்
ஏற்றெடுத்த மொழிகல்வி எவற்றினுக்கும் இறையோனே"

என்று அகத்தியர் சிவபெருமானிடம் கூறுவதாக வரும் பாடல்களால் இதனை அறியலாம்.

சுவாமிகள் சைவ சித்தாந்தத்தில் எவ்வளவு ஆழ்ந்து திளைத்து மகிழ்ந்துள்ளார் என்பதற்குக் காஞ்சிப் புராணத்தில் வரும் பல அற்புத உவமைகள் சிறந்த சான்று களாகத் திகழ்கின்றன. நூலின் அவையடக்கப் பாடல் அவற்றுள் ஒன்று. தாம் பேசும் மொழிகள் பிதற்றல்களாக இருப்பினும் அவை இறைவனுடைய பெருமையைப் பேசு வதால் குற்றமற்றுத் தோன்றும் எனக் கூற வருபவர், அதற்கு உவமையாகக் கல் செம்பு பொன் முதலியவையும் சிவபெருமான் வடிவம் கொண்டால் அருள்மயமாவதைக் கூறு கிறுர். மாயையினல் ஆகிய வடிவங்கள் இறைவனுல் ஆவேசிக்கப்பட்டபோது அவனது அருள்வடிவங்களாகவே கருதப்படும் சைவ சித்தாந்த உண்மை இங்கு எவ்வளவு எளிமை யாக வெளிப்பட்டிருக்கிறது என்று எண்ணிப் பார்ப்பவருக்கு இதன் அருமை விளங்கும்.

"மாயை காரிய உருக்களும் எம்பிரான் வடிவம்
ஆயவேல் அவையருள் மயமாகும்; மற்றதுபோல்
பேயனேன் பிதற்றுரையும் ஏகம்பர் தம்பெருமை
தூயகாதையுள் ஞறுதலால் துகள்அறத் தோன்றும்"

என்பது இவ்வுவமையை உள்ளடக்கிய பாடல். அவ்வாறே மழை நின்றும் சிறு தூறல் எஞ்சியிருப்பதற்கு, மும்மலப்பிணி நீங்கப் பெற்ற நிலையிலும் வாசனுமலம் தாக்குவதற்கு உவமையாக்குகிறுர். பாலியாறு பல்வகை வயல்களுக்கும் பாயப் பல கால்களாகப் பிரி வது, சிவபெருமான் உயிர்களுக்கருள ஒன்பது வகைத் திருமேனிகளை எடுப்பது போலவே அவருக்குப் படுகிறது. காஞ்சியைப் பார்த்து இமையவர் வியக்கும் போது, "முன்னெரு

சமயந் தன்னைப் பொருளென முற்றி நின்ருேர், பின்னர் வான் சைவம் எய்தப் பெறின் அவர் பேசுமாப் போல்" என வியந்து பேசுவதாக அவர் குறிப்பதும் இங்குக் கருதத் தக்கது. ஒரு புலவருடைய ஆழ்ந்த ஈடுபாட்டையும் எண்ணப் போக்குகளையும் தெளிந்த சிந்தனைகளையும் வெளிப்படுத்தி நிற்பதில் உவமைக்கு ஈடாக வேறு எதனையும் கூற முடியாது. இவ்வடிப்படையில் பார்க்கும் போதே காஞ்சிப் புராண உவமைச் சிறப்புக் களை நாம் உள்ளபடி அறிய முடியும்.

சைவ சித்தாந்தம்: சிவஞான சுவாமிகள் ஆழ்ந்த சைவ சித்தாந்த அறிவுடை யவர். ஏனை அகப்புறச் சமயங்களோடு சைவ சித்தாந்தத்தை ஒப்பிட்டு அதன் அருமையை நிலைநாட்டியவர். சிவஞான சித்தியார் பொழிப்புரை (சுபக்கம்), சிவஞான போதச் சிற்றுரை, சிவஞான மாபாடியம் ஆகியவை இத்துறையில் அவர் அருளிய ஒப்பற்ற உரை நூல்களாகத் திகழ்கின்றன.

சைவ சித்தாந்த சாத்திரங்களின் முடிமணியாகத் திகழ்வது சிவஞான போதம். அளவால் மிகச் சிறிய நூல் இது. இதில் பன்னிரண்டு சூத்திரங்களே உள்ளன. அடிகளின் எண்ணிக்கை நாற்பது. சொற்கள் இருநூற்றுப் பதினுறு. எழுத்துக்கள் அறுநூற்று இருபத்து நான்கு. ஆனல் இது உணர்த்தும் பொருள் பரம்பொருளின் எல்லையற்ற தன்மையைப் போல் விரிந்து செல்வது. அவ்வாறு விரிந்து செல்லும் பொருள்களின் நுட் பத்தையெல்லாம் அறிந்து ஆராய்ந்து சுவாமிகள் செய்த மாபாடியம் சைவ சித்தாந்த அறிவின் அடித்தளமாகவே அமைகிறது எனலாம்.

மாபாடியம் என்பது பேருரை எனப் பொருள்படும். வேதவியாசருடைய பிரம்ம சூத்திரத்திற்கு நீலகண்ட சிவாச்சாரியார், சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகிய நான்கு பெரியோர்கள் வடமொழியில் இயற்றிய பேருரைகளே மாபாடியம் எனப் போற்றப்படுகின்றன. இவற்றுள் நீலகண்ட பாடியம் வேதாகமத்தைத் தழுவிச் சிவாத் துவிதக் கொள்கையை விளக்குகின்றது. சங்கரருடைய பாடியம் கேவலாத்துவிதத்தை யும், இராமனுச பாடியம் விசிட்டாத்துவிதத்தையும், மத்துவ பாடியம் துவைதத்தை யும் விளக்குவன. இவை மூன்றும் சிவாகமங்களைப் பொருட்படுத்தாது, பிரம சூத்திரம், வேதோபநிடதங்கள், பகவத் கீதை ஆகியவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை.

இவற்றைக் கற்றுத் தேர்ந்த சுவாமிகள் சைவ சித்தாந்த சுத்தாத்துவித உண்மையை நிலைநாட்டும் மெய்கண்டாரது சிவஞான போதத்திற்கு ஒரு பேருரை இயற்றக் கருதி, அவ்வாறே தாம் காஞ்சியில் தங்கியிருந்தபோது இதனை இயற்றி யருளினர். வடமொழி மாபாடியங்களிலும் இது சிறந்ததாகக் காணப்படுகின்றது என் பது அறிஞர் கருத்து. வேதங்கள், உபநிடதங்கள், சைவ சித்தாந்த சாத்திரங்கள், இரத் தினத் திரயம், சிவதத்துவ விவேகம் முதலிய வடநூல்கள், ஏனைத் தமிழ் நூல்கள் என எண்ணற்ற நூல்களிலிருந்து கருத்துக்களை எடுத்துக் காட்டிச் சைவ சித்தாந்தக் கோட் பாட்டினை இதில் அவர் நிறுவியுள்ளார். தமிழில் மாபாடியம் பெற்ற சமயம் சைவ சித்தாந்தம் ஒன்றே என்ற உண்மையே இதன் சிறப்பை விளக்கப் போதுமானது. இதன் காரணமாகவே மாபாடியச் சிவஞான யோகிகள், மாபாடியகாரர் எனச் சுவாமிகள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

மாபாடியம் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை மிக விரிவாகப் பேசும் ஓர் உரை நூல். ஐந்தொழில் பற்றி இரண்டாம் சூத்திர முதல் அதிகரணத்தில் காணப்படும் ஒரு பகுதி சுவாமிகளின் எல்லையற்ற அறிவாற்றலைக் காட்டும். "முதல்வன் ஐந்தொழில் செய் தல் தன் பொருட்டோ? பிறர் பொருட்டோ? வீணே? தன்பொருட்டெனின், வரம்பி லின்பமுடைய முதல்வனுக்கு இச்செய்கையான் வரக்கடவதோர் பயனில்லை. உயிர்களின்

பொருட்டெனின், – உயிர்களும் அவனும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ? பொன்னும் பணியும் போல் அபேதமாயின், அது தன்பொருட்டேயாம். இருளும் வெளியும் போற் பேதமாயின், அவ்வுயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்தற்கு ஒருவாற்ருனும் இயையில்லை. சொல்லும் பொருளும் போற் பேதா பேதமெனின், அபேதமும் பேதமுமாமென்றல் சமணர் கூறும் அநேகாந்தவாதமாம். சொல்லும் பொருளும் வேறேயாயினுஞ் சொல்வந்தெழலும் பொருடோன்றுதல் பற்றி அபேதமென்பார் மதத்தை ஒருவாற்ருன் உடம்பட்டுப் பேதா பேதாமென்னுந் துணையேயன்றி, ஒரு பொருட்டு இரண்டு தன்மை கோடல் பொருந்தாமையின் அது போலியேயாம். இங்ஙன மாகலின், பிறர்பொருட்டென்பது பொருந்தாது. இனி, அவ்வாறன்றி வீணெனின், – பித்தர் செய்யுந் தொழிலோடொக்கும். பித்தரேயன்றி, அறிவான் முதிர்ந்த அரையர் முதலியோரும் வேட்டையாடுதல் சூதாடுதல் உயிர்த்தல் இமைத்தல் ஆவித்தல் தும்முதல் முதலிய வீண்டொழில் செய்யக் காண்டலின், முதல்வனும் அவ்வாறு கொன்னே செய்தல் அமையுமெனின், – வேட்டையாடுதல் புலி முதலிய விலங்குகண் மிக்கு நாடு நலியாமைப் பொருட்டாதல், தமக்கு மடிமை வராமை முதலியவற்றின் பொருட்டாதல், உணவின் பொருட்டாதல் யாதானுமொரு பயன் குறித்தன்றிச் செய்யாமையானும் சூதாடுதல் வஞ்சனையாற் பகைவரை வெல்லுதற்கு உபாயமறிதற் பொருட்டாதல் பணயம் பேசிப் பொருளீட்டிற் பொருட்டாதல் யாதானுமொரு பயன் கருதியன்றிச் செய்யாமையானும்; உயிர்த்தல் உயிர்நிலையின் பொருட்டாகலானும், இமைத்தல் விழியைப் பாதுகாத்தற் பொருட்டாகலானும், ஆவித்தல் தும்முதல் முதலாயின தங்குறிப்பினன்றிக் காரணத்தான் நிகழ்தலானும், இளஞ்சிறுர் செய்யுஞ் சிறுதேருருட்டல் சிற்றிலிழைத்தல் முதலிய விளையாடற்றெழிலும், போர்முகத்திற்றேர் நடாத்துதல் அட்டிற்றெழில் வன்மை முதலியன சோபான முறையாற் பயிலுதற் பொருட்டு இருமுதுகுரவர் முதலியோராற் செலுத்தப்பட்டு நிகழ்தலின், அவை அப்பெரும் பயனுடையவாய், அவ்விளமைப் பருவ மாத்திரையின் மகிழ்ச்சி மீதூர்தலாகிய அற்ப பயனும் உடையவாகலானும், அவையெல்லாம் வீண்டொழிலன்மையின், வீண்டொழிலெல்லாம் பித்தர் முதலியோர் செய்யுந் தொழிலேயாம். இங்ஙனமாகலின், ஐந்தொழில் செய்வோன் முதல்வனென்றல் இலக்கண வழுவாமென்று ஆசங்கை நிகழ்ந்த வழி, அதனை நிக்கி வேறுயினுங், கலப்பினுல் அவையேயா மியையுடைமையின், உயிர்களின் பொருட்டே முதல்வன் ஐந்தொழில் செய்வன்; ஆதலான், இலக்கண வழுவாமாறு யாண்டையதென்று ஒருதலையான் இறுக்க வேண்டுதலின், அங்ஙனமிறுத்தற் பயத்ததாய்ப் போந்த அவையே தானேயினுங், கலப்பினுல் அவையேயா மியையுடையின், உயிர்களின் பொருட்டே முதல்வன் இத்தகைய பல பகுதிகளைப் பேருரையாகிய இதில் காணலாம்.

இப்பேருரை சுவாமிகள் காலத்திற்குப் பின் பல காலம் திருவாவடுதுறை ஆதீனத்தை விட்டு வெளிவராமலேயே இருந்தது. சூரியனர் கோயில் ஆதீன மகாசந்நிதானம் முத்துக்குமாரசுவாமி தேசிக சுவாமிகள் முயற்சியால் *1921*-ம் ஆண்டிலேயே அச்சேறியதாகத் தெரிகிறது.

கண்டனம்: இத்துறையில் சுவாமிகள் எழுதியனவாக "எடுத்து" என்னும் சொல்லுக்கிட்ட வைரக் குப்பாயம், "என்னை இப்பவத்தில்" என்னும் செய்யுட் சிவசமவாத மறுப்பு; சிவசமவாத உரை மறுப்பு, சித்தாந்த மரபுக் கண்டனக் கண்டனம், இலக்கண விளக்கச் சூருவளி, கம்பராமாயண முதற்செய்யுள் சங்கோத்தர விருத்தி என்னும் ஆறு நூல்கள் காணப்படுகின்றன.

இவற்றுள் முதல் மூன்று நூல்களும் ஒரு கருத்துப் பற்றியன. சுவாமிகள் காலத்தில் திருவண்ணமலை ஆதீனத்தில் ஞானப்பிரகாச முனிவர் என ஒருவர் இருந்தனர். இவர் அகச் சமயங்களில் ஒன்ருன சிவசமவாதத்தைச் சேர்ந்தவர். சிவசமவாதமும் முப்பொருள் உண்மையை ஒப்புக் கொள்கின்றது. எனினும் அதனை விளக்குவதில் சைவ

சித்தாந்தத்திலிருந்து அது வேறுபடுகிறது. அதன் கொள்கைப்படி முப்பொருள்களுக்கும் இயல்பாகவே பதிஞானம் பசுஞானம் பாசஞானம் உள்ளன. இவற்றுள் பசுவாகிய உயிருக்குக் கட்டுநிலை, வீட்டுநிலை என இரு நிலைகள் உள்ளன. பாசஞானம் சுவை ஒளி ஊறு ஓசை முதலிய நுகர் பொருள்களை அறிவித்து நிற்கப் பசுஞானமானது தன் புலன்களின் மூலம் அவற்றை அனுபவித்து வரும். பாசஞான பசுஞானங்கள் நீங்கியவழி எரியாச் செந்தழல்போல் உயிர் அழிவின்றிக் கிடக்கும். அப்போது உயிர் அறியும் திறனுடையதேனும், இது என ஒரு பொருளையும் சுட்டி அறியும் திறன் அதற்கு இல்லை. சிவசமவாதக் கொள்கைப்படி இது உயிர்களின் கட்டு நிலையாகும். இவ்வாறிருக்கும் உயிரைப் பச்சைப் புழுவினைப் பற்றும் குளவியைப் போல் பதிஞானம் வந்து பற்றும். அவ்வளவில், தன்னைப் பற்றி எடுத்துச் சென்ற குளவியினையே நினைத்துக் கொண்டிருக்கும் பச்சைப்புழு அக்குளவியின் உருவத்தைப் பெறுவதுபோல், சிவத்தையே தியானம் செய்யும் உயிரும் சிவமாகி ஐந்தொழில் இயற்றும் திறனும் முற்றறிவியல்பும் பெறும். இது உயிர்களின வீட்டுநிலை என்னும் சிவசமவாதம். இக்கொள்கையையுடைய ஞானப்பிரகாசர் இதனைத் தம்மளவில் வைத்துக் கொள்ளாது, இக்கொள்கையின் அடிப்படையில் சிவஞான சித்தியாருக்கு ஓர் உரை வகுத்தார். அவருக்கு முன்னரே சிவாக்கிர யோகிகள், மறைஞான தேசிகர், நிரம்பவழகிய தேசிகர் ஆகிய மூவரும் சித்தியாருக்கு எழுதிய உரைகளையும் அவர் கருத்தில் கொள்ளவில்லை. இவ்வளவில் இவற்றை மறுத்து எழுந்தனவே சுவாமிகளின் இம்மூன்று நூல்களும்.

ஞானப்பிரகாசர் உரை வெளிவந்தவுடன், திருவண்ணாமலை ஆதீனப் பண்டார சந்நிதிகளில் ஒருவர் காஞ்சி வந்தார். அவர் தம் மாணவர் ஒருவரைச் சுவாமிகளிடம் அனுப்பிச் சித்தியார் சுபக்கத்தில் உள்ள "என்னை இப்பவத்தில் சேராவகை எடுத்து" என்னும் செய்யுளில் உள்ள "எடுத்து" என்னுஞ் சொல்லுக்குப் பொருள் கேட்கச் செய்தார். அதற்குச் சுவாமிகள் தந்த மறுப்புரையே "என்னையிப் பவத்தில்" என்னும் செய்யுட் சிவசமவாத மறுப்பு. இதற்கு அப்பண்டார சந்நிதி எழுதி வெளியிட்ட மறுப்புக்கு மறுப்பாக வெளிவந்ததே "எடுத்து என்னும் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்" என்னும் நூல். இதன் பின்னர் ஞானப்பிரகாசர் உரை முழுதும் போலியுரை என விளக்கவே அவர் "சிவசமவாத உரை மறுப்பு" என்ற கண்டன நூல் எழுதினர்.

திருவாவடுதுறை ஆதீனத்தால் அக்காலத்தில் மரபட்டவணை ஒன்று வெளியிடப் பட்டது. அதற்கு மறுப்பாகத் தருமபுர ஆதீனம் "சித்தாந்த மரபு கண்டனம்" என்றொரு நூல் வெளியிட்டது. அதற்கு மறுப்பாகச் சுவாமிகள் எழுதிய நூலே "சித்தாந்த மரபு கண்டனக் கண்டனம்" ஆகும்.

இலக்கணப் புலமை நிரம்பிய சுவாமிகள் திருவாரூர் வைத்தியநாத தேசிகரின் "இலக்கண விளக்கம்" என்ற நூலில் காணப்பட்ட பிழைகளையெல்லாம் சுட்டிக் காட்டி ஒரு மறுப்புரை நூல் எழுதினர். அது "இலக்கண விளக்கச் சூறாவளி" என்ற பெயரில் வழங்கி வருகிறது.

சுவாமிகளின் அறிவுத்திறன் எல்லையற்றது. ஒன்றை மறுத்து உரிய காரணங்கள் காட்டவோ, அவ்வாறு காட்டிய காரணங்களைத் தாமே மறுக்கவோ அவரால் முடியும். இதனை விளக்கும் நிகழ்ச்சியொன்று அவர் வாழ்க்கையில் காணப்படுகின்றது.. அவர் காஞ்சியில் இருந்தபோது சின்ன காஞ்சியிலுள்ள வைணவர் சிலர் அவரிடம் வந்தனர். தமிழிலுள்ள நூல்களில் கம்பராமாயணம் ஒன்று மட்டுமே சிறந்த நூல் என இறுமாப்புடன் கூறினர். சுவாமிகள் "நாடிய பொருள் கைகூடும்" என்ற ஒரு பாடலை மட்டும் எடுத்துக்கொண்டு சொல்லுக்குச் சொல் அதிலுள்ள பிழைகளைச் சுட்டிக் காட்டினர். வந்தவர்கள் வாயடைத்து நின்று, பின்னர் மன்னிப்புக் கேட்டனர். சுவாமிகள் மனமிரங்கித் தாம் சுட்டிக் காட்டிய பிழைகளுக்குத் தாமே பதிலும் கூறினர். "கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தர விருத்தி" என்னும் நூல் இவ்வாறு எழுந்ததே ஆகும்.

இந்நூல்களே அல்லாமல் "தனிச் செய்யுளுரை" என்ற ஒரு நூலையும் சுவாமிகள் இயற்றியுள்ளதாகத் தெரிகிறது. "அங்கோழி முட்டை" "எங்கணவன்" என்று தொடங்கும் இரு செய்யுள்கட்குப் பொருள் கூறுமாறு புலவர் சிலர் ஒரு சமயம் சுவாமிகளிடம் கேட்க, அவர் கூறிய விருத்தியுரையே இந்நூல். இதனை வெளிப்படுத்தியவர் சேற்றூர்ச் சமஸ்தான வித்வான் இராமசாமிக் கவிராயர்.

இவ்வாறு அந்நூற்றுண்டின் மிகச் சிறந்த நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், மொழிபெயர்ப்பாசிரியராகவும், கண்டன நூலாசிரியராகவும் விளங்கியவர் சிவஞான சுவாமிகள். உரைகளில் சிவஞான பாடியம் தொல்காப்பியச் சூத்திர விருத்தி ஆகியவையும், இலக்கியங்களில் காஞ்சிப் புராணமும் சுவாமிகள் பெயரை என்றும் வாழ வைக்கும். இது உறுதி.

## துணை நூல்கள்

### அ. சிவஞான முனிவர் நூல்கள்


1. உரைச் செய்யுள். திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், துந்துபி ஆண்டு.
2. காஞ்சிப் புராணம், காஞ்சிபுரம்: மெய்கண்டார் கழகம், 1937.
3. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், திருநெல்வேலி: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1955 (முதற் பதிப்பு 1927).
4. சிவசமவாதவுரை மறுப்பு, சிதம்பரம்: சித்தாந்த வித்தியானுபாலன யந்திரசாலை, விஜய ஆண்டு.
5. சிவஞான சித்தியார் பொழிப்புரை (சுபக்கம்), திருநெல்வேலி: சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1923.
6. சிவஞான போதம் உரை, அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1953.
7. சிவஞான பாடியம், சென்னை: சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1952 (முதற் பதிப்பு 1936).
8. தருக்கசங்கிரகமும் தருக்கசங்கிரக தீபிகையும், சென்னை: வித்தியாநுபாலன யந்திர சாலை, சுக்கில ஆண்டு.
9. திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், சென்னை: சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1957 (முதற் பதிப்பு 1927).
10. பிரபந்தங்கள், திருவாவடுதுறை: திருவாவடுதுறை ஆதீனம், 1950.
11. தொல்காப்பியச் சூத்திர விருத்தி, சென்னை: சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1946.


### பிற


12. சுத்தானந்த பாரதியார், சிவஞான தீபம், கோலாலம்பூர்: மலாயா சைவ சித்தாந்த சங்கம், 1952.
13. சுப்பிரமணிய பிள்ளை, கா. சிவஞான முனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும், சென்னை: சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1955 (முதற் பதிப்பு 1932).